# தும்பைப்போரில் தானைமறம்

***முனைவர் கி. இராம்கணேஷ்***
***உதவிப் பேராசிரியர், தமிழ்துறை***
***ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி***
***பொள்ளாச்சி***

**முன்னுரை**

பண்டைக்காலம் தொட்டுப் போர் என்பது இவ்வுலகில் தவிர்க்க முடியாததொன்றாகும். புவியின்கண் தோன்றும் உயிரினங்கள் அனைத்தும் அன்றாட வாழ்க்கையில் தங்களுக்கான தேவைகளைப்பூர்த்திசெய்துகொள்ளப்போராடிக்கொண்டிருக்கும் நிலை உணரத்தக்கதாகும். தாயின் கருவிலிருந்து குழந்தை போராடியே வெளிவரும். அதைப் போன்றே முட்டையிலிருந்து வெளிவரும் உயிரினங்களும் போராடியே வெளிவருகின்றன. பிறப்பு நிலையே போராட்ட நிலையாக அமைகின்றது. போர் வேண்டாம் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. ஆனால், 'போர்க்குணம்' எப்போதும் தேவையாக இருக்கிறது. அவ்வகையில் தும்பைப்போரில் தானைமறம் என்ற துறை குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**போர்- விளக்கம்**

போர் என்பது உலக இயற்கை என்று கூறுமளவிற்கு அனைத்து நாடுகளிலும் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. ஏதேனும் ஒன்றைப் பெறவேண்டும் என்னும் உணர்வைக் கொண்டதாகவே போர் அமைகின்றது. போரினைக் குறித்து மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர், "நாடுகாவல், நன்மை செய்தல், பொருதல் ஆகிய மூவகை அரசவினைகளுள், இறுதியது அரசர்க்குச் சிறந்ததாதலின் அது வினையென்னும் பொதுச்சொல்லால் விதந்து குறிக்கப் பெறுதல் மரபு. அரசர் போர் ஆசை, பாதுகாப்பு, பகை, தண்டனை, அருள் என்னும் அறுவகைக் காரணத்தால் பிறக்கும்" (ஞா.தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, ப-86) எனக்குறிப்பிட்டுள்ளார்.

மனிதனைத் தவிர பிற உயிரினங்களின் தேவை உணவைப் பெறுதல், உடலியல் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுதல் என்ற நிலைகளில் போராடிக்கொண்டிருப்பதாக அமைகின்றன. மனிதனின் தேவையோ, மேற்கூறிய நிலைகளேயன்றி மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை, புகழாசை என்ற காரணங்களுக்காகப் போராடவேண்டிய குறிக்கோள்களைக் கொண்டதாக விளங்குகின்றது. பிறப்பு முதற்கொண்டு இறப்பு ஈறாகப் பேச, நடக்க, எழுத, படிக்க என அனைத்துச் செயல்களிலும் போராடவேண்டிய சூழல் நிலவுகிறது.

சங்க இலக்கியத்தின் இரண்டு கண்களாகக் கருதப்படும் காதலும் வீரமும் இப்போராட்டத்தின் வழித்தோன்றல்கள் ஆகும். வீரம் பற்றிய செய்திகள் உடல் போராட்டமாக அமைகின்றது. காதல் வாழ்வில் தலைவன், தலைவி இருவரிடையே சந்திப்பு நிகழவும், இருவரும் ஒருவரையொருவர் விரும்பத்தொடங்கிய களவானது கற்பில் முடியவும் போராடுவர். இச்செயல்பாடுகளுடன் போராட்டம் நிறைவு பெறுவதில்லை. கற்புக்காலத்திலும் பல்வேறு போராட்டங்கள் உண்டு. இஃது மனப்போராக விளங்குகிறது. போராட்டமே உலகின் இயக்கம் என்பதை அறியமுடிகிறது.

மனித வாழ்க்கையில் ஒரு பகுதியாகிவிட்ட போரானது தனிச்சிறப்பு மிக்கதாகச் சான்றோர்களால் போற்றப்படுகின்றது. போர்க்குணம் கொண்டு விளங்கும் ஆடவரை வீரர், மள்ளர், மறவர், பொருநர், மழவர் எனப் பலபெயர்களால் பண்டைத்தமிழ் இலக்கியம் குறிப்பிடுகின்றது. போர் பற்றிய கருத்துகளை அறிஞர்கள் வரையறை செய்துள்ளனர். "பாசியலார் தவிர்க்க முடியாததென்றும், மார்க்சியலாளர் வருக்கப்போர் என்றும் உரைப்பர். அர்னால்டு டாயின்பீ போன்ற வரலாற்றாசிரியர்கள் போர் தவிர்க்க முடியாததென்றும் அது தனிமனித முயற்சிக்கு அப்பாற்பட்டது என்றும் கூறி, இந்துக்களின் ஊழ்வினைக் கருத்தோடு தொடர்புபடுத்தி உரைப்பர். டார்வின் போன்ற கூர்தலறக் கோட்பாட்டினர் போரானது 1. தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் உணர்வு 2. தகுதியுடையவை

நிலைபெறுதல் ஆகிய இரண்டு காரணங்களின் அடிப்படையில் நிகழும் என்பர்" (அரங்க.இராமலிங்கம், சங்கஇலக்கியத்தில் வேந்தர், ப-136).

எனவே பார் ஆளப் போர் தேவை என்பதை உணரமுடிகிறது. மேற்கண்ட இக்காரணங்களேயன்றி புகழ்வேட்கை, எல்லையை விரிவுபடுத்துதல், குடிக்கடன், மானவுணர்வு, செல்வமேம்பாடு, மகட்கொடை மறுப்பு, தற்காப்புச்சூழல் போன்ற காரணங்களுக்காகவும் போர் நிகழுதல் உண்டு. பண்டைத் தமிழகத்தில் வேந்தர்களாகத் திகழ்ந்தவர்களுக்குள் ஏற்பட்ட பகைமை உணர்வு போர் ஏற்பட அடித்தளமாக அமைந்தது.

போர் நடைபெறவில்லை என்றால் வீரர்களின் சிறப்பு வாடிவிடும் என்றும், படை இல்லாது போனால் மன்னரின் சிறப்பு அழிந்துவிடும் என்றும் கருதப்பட்டது.

**போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த**
**வேரின்றி வாடும் மரமெல்லாம் - நீர்பாய்**
**மடையின்றி நீள்நெய்தல் வாடும் படையின்றி**
**மன்னர்சீர் வாடிவிடும்''** (நான்மணிக்கடிகை, பாடல் எண்-44)

என்ற பாடலின் வழி போரின் இன்றியமையாமை உணர்த்தப்பட்டுள்ளது. நால்வகைப் படைகளைக் கொண்டு நானிலம் ஆட்சிசெய்யப் போர் அவசியமாகிறது. போரின் மூலமாக பல நாடுகளைப் பிடித்து அரசாட்சி செய்த அரசன் பேரரசனாகக் கருதப்பட்டான். அரசியலின் ஆரம்ப நிலைப் போரினை அடிப்படையாகக் கொண்டதென்பதை இதன்வழி அறியலாம்.

**தும்பைப்போர்**

மனிதத்தோற்றம் நிகழ்ந்த காலம் முதல் தொடங்கிய போர்களுக்கு இலக்கணம் வகுத்துப் போர் மரபுகளைத் தமிழர்கள் பாதுகாத்தனர். அப்போர் வகைகளுள் தும்பைப்போர் குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியர் குறிப்பிடும் பன்னிரண்டு புறத்திணைகளுள் தும்பைக்கு முன் நிகழும் வெட்சி முதலாக நொச்சி ஈறாகக் கூறப்பட்டவைப் போருக்கான ஆயத்தங்களே ஆகும். தும்பைக்குப் பின் போர் நிறைவுற்று வென்றவர் வாகை சூடும் நடைமுறை உள்ளது. எனவே தலையழிக்கும் போரான, 'தும்பையே' போர் என்னும் சொல்லுக்குப் பொருத்தமான துணை ஆகின்றது.

**"மைந்துபொரு ளாக வந்த வேந்தனைச்**
**சென்றுதலை அழிக்கும் சிறப்பிற் றென்ப''** (தொல். பொருள். நூற்பா எண்.1016)

தும்பைத்திணை மற்ற திணைகளினும் வேறுபட்டது. தன் வீரத்தைக்காட்டிப் புகழைப்பெற வேண்டும் என்ற நோக்கம் கொண்டதாக அமைகின்றது. தன் வலிமையைக் காட்டிப் போர் தொடுக்கும் மறவரை எதிர்த்துச் சென்று போர் செய்து அழித்தலே மிகவும் சிறப்புடையது. அவ்வாறு பொருதல் போர் என்று குறிக்கப்படுகிறது.

வலிமையை முதன்மையாகக் கொண்டு படையெடுத்து வந்த அரசனை எதிர்த்துப்போய், அவன் கருதும் வீரத்தின் தலைமையினைக் கெடுக்கும் சிறப்பினையுடையது தும்பைத்திணை என்பர். வீரங்காட்டிப் பகையரசனை வெல்லக்கருதிய மற்றொரு அரசன் தன் படையினருடன் சென்று தும்பை மாலை சூடிப் போருக்கு ஆயத்தமாகும் நிலை தும்பை ஒழுக்கமாகக் கருதப்படுகிறது.

'மைந்து' என்ற சொல்லே, 'மைந்தன்' என மாறி காலப்போக்கில், 'மகன்' எனும் சொல்லாக உருவானது. போர்த்தொழிலில் ஈடுபட்டு நாட்டினைக் காக்கவே அன்றைய காலத்தில் ஆண்பிள்ளை வேண்டும் எனப் பழந்தமிழ்ச்சமூகம் கருதியிருக்கலாம்.

**தானைமறம்**

சங்ககாலப் போரில் நால்வகைப் படைகள் ஈடுபடுத்தப்பட்டன. அவை, யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகியனவாகும். இவற்றுள் முதல் மூன்றும் தனித்து இயங்காது, வீரர்களின் ஏவலாலும் பயிற்சியாலும் திறமைகொண்டுச் செயலாற்றும் படைகளாகும். நான்காவதாகக் கூறப்படும் காலாட்படை முழுவதுமாக வீரர்களின் தறுகண்மையை அடிப்படையாகக் கொண்டதாகும். போரினால் விளைவது காயமே ஆனாலும் அதனைப் புகழின் அடையாளமாகவே வீரர் கருதினர். மறவர்களின் சிறப்பான போர்ச்செயலே தானை மறமாகக் கருதப்பட்டிருக்கிறது.

"போர் எதிர்ந்த சேனை பொருது மடியாத ஆற்றலின் உணர்ச்சியைச் சொல்லியது தானை மறமாகும். மேலும், கெடுமென்று ஓயாது போரிடவேண்டும் என்பது மற்றொரு விளக்கமாகும்." (கடிகாசலம், பதிப்பாசிரியர்., சங்கஇலக்கியம், கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு , ப-88) பொருகளத்திலே வெற்றியென்னும் விழுப்பொருளைத் தன் வாழ்க்கையின் உயர்நிலையாகக் கொள்ள வேண்டும் என்னும் துடிப்பே, வீரனைத் தானைமறம் கொண்டவனாகச் செயல்படச் செய்கிறது. தானை மறம் குறித்துப் புறப்பொருள் வெண்பாமாலை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

**"தாம்படைத் தலைக் கொள்ளாமை**

**ஓம்படுத்த உயர்வு கூறின்று"** -தும்பைப்படலம், நூற்பா எண்-3)

தானைமறத்தின் சிறப்பினைப் புறநானூற்றின் வழி அறியலாம். ஏழுபாடல்கள் தானைமறத்தின் பெருமையைப் பறைசாற்றுவதாகப் புறநானூற்றின்கண் அமைந்துள்ளன. அதியமான் நெடுமானஞ்சி போர்புரிவதில் பெருவிருப்புக் கொண்டவன். எதிர்த்து வந்தவர்களை இல்லாமற் செய்யும் தோள்வலியும், மனவலிமையும் கொண்ட மாவீரன். களத்திற்கு அதியமான் வருகின்றான் என அறிந்தால், பகைவர் கூட்டம் பகலவனைக் கண்ட பனிபோல விலகிவிடும். இத்தகைய சிறப்புகளைக் கொண்டவன் அதியமான் என்பதை உணராத பகைமன்னன் ஒருவன் சினந்து போருக்கு முற்படுகிறான். அச்சூழலில் ஔவையார், அதியமான் ஆற்றலைப் பல்லோர்க்கும் உணர்த்துவதாகப் பாடல் ஒன்று அமைந்துள்ளது.

**களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போர் எதிர்ந்து**
**எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்**
**எண்தேர் செய்யும் தச்சன்**
**திங்கள் வலித்த கால்அன் னோனே"** - (புறநானூறு, பாடல் எண்-87)

போர்க்களத்திற்கு வருவதைப் பகைவர்களே போற்றுங்கள். பல்லோரைத் தனித்து வெற்றி கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவன் ஒருவன் எம்முளும் இருக்கின்றான். ஒரு நாளைக்கு எட்டுத் தேர்களைச் செய்யும் தச்சன், ஒரு மாதம் முழுவதும் இருநூற்றுநாற்பது தேர் செய்யும் ஆற்றலுடையவனாவான். ஆயினும், ஒரு மாதம் முழுவதும் உழைத்து ஒரே ஒரு தேர்க்கால் செய்துள்ளான் எனில், அத்தேர்க்காலின் ஆற்றலை என்னவென்று சொல்வது. பல்வகைத் திறன்களையும் தன்னகத்தே கொண்ட தானைமறவனாகவும், ஏழுகடலை எழுசீரில் அடக்கியுள்ள திருக்குறள் போன்றவன் அதியமான் என்பதும் வெளிப்பட்டுள்ளது.

**போர் ஒலி**

சங்ககால வீரர்கள் போரின் மீது பெருவிருப்புக் கொண்டு திகழ்ந்ததை ஒரு பாடல் தெளிவாக உணர்த்தியுள்ளது. போருக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, பறையறைந்து போர்த் தொடக்கம் கூறப்படும். இந்நிலையில் இயற்கையாய் எழுந்த காற்றின் ஓசை போர்ப்பறையான முழவிலே பட்டு ஒலியெழுந்தது. இதைக்கேட்ட மறவர்கள் மறக்களத்திற்குச் செல்ல துடித்தெழுந்த செய்தி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

**"இழை அணிப் பொலிந்த ஏத்துகோட்டு அல்குல்**
**மடவரல் உண்கண் வாள்நுதல் விறலி**
**பொருநரும் உளரோநும் அகன்தலை நாட்டு என**
**……………………………………………………**
**பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை**
**வளிபொரு தெண்கண் கேட்பின்**
**அது 'போர்' என்னும், என்ஐயும் உளனே"** (புறநானூறு, பாடல் எண்-89)

அணிகள் அணிந்த இடையையும் மென்மையையும் மைதடவிய கண்களையும் உடைய ஆடுமகளே! உங்கள் பெரிய நாட்டில் போரிடுவோர் உளரோ? என்று கேட்ட வேந்தனே! கேள்; எங்கள் நாட்டில் அடிக்கும் கம்புக்கு அஞ்சாத பாம்பு போன்ற இளைய வலிமையான வீரரும் உள்ளனர். அவர் மட்டுமல்லாது பொதுமன்றத்தில் தொடங்கும் தண்ணுமைப் பறையில் காற்று மோதுவதால் உண்டாகும் ஒலியைக்கேட்டு அது போர்ப்பறை எனக்கருதும் தலைவனும் உள்ளான்

என்று அதியமான் சிறப்பினை ஔவையார் பாடியுள்ளார். அதியமானின் சிறப்பு அவர்தம் படை வீரர்களுக்கும் உண்டு. போர் மறவர்களின் தானைமறத்தைப் பாடல் விளக்கியுள்ளது.

போர் இல்லாமல் இருக்கும் காலத்திலும் பண்டைக்கால வீரர் போர் நினைவாக இருந்தனர் எனத் தானைமறம் உணர்த்தி நிற்கிறது. இதனை, "உலகச் சமுதாயங்கள் அனைத்திலும் போரே தலைமையும் முதன்மையும் எய்தியிருந்தது. தொல்காப்பியர் காலச்சமுதாயம் அதற்கு விலக்கன்று. போர்வயிற்பிரிவும் மறக்காதலனைத் தடுப்பது போல இலக்கியச்சான்றோ, இலக்கணக்குறிப்போ ஒன்றுகூட இல்லாமை உன்னத்தக்கது. தொல்காப்பியப் புறத்திணை, அகத்திணையினும் தலைமையுடையது. அகமா, புறமா எனில் புறமே முதல் என்பதில் அற்றைநாட்கருத்து எனப் போர்த்திணையாகிய புறத்திணையைப் பற்றிக் கருத்துரைக்கின்றார் க.ப. அறவாணன்" (அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப-173) என்னும் எடுத்துக்காட்டுக் கருத்துடன் ஒப்புநோக்கலாம்.

**தானை மறமும் போரறமும்**

தன்னிடம் போரிடத்தக்கோனிடம் மட்டுமே போர் செய்யவேண்டும் என்பது தும்பையறம் என்பதை புலவர் ஆவூர் மூலங்கிழார் புறநானூற்றுப் பாடலொன்றில் குறிப்பிட்டுள்ளார். போர் நடைபெறும் இடத்தில் ஒருபடையின் மன்னன் மட்டும் போர்க்களத்தில் நின்றிருந்தான். எதிர்நின்ற படையின் மன்னன் பாசறைக்குள்ளே பாதுகாப்பாக இருந்துகொண்டு தன் படையை அனுப்பிவைத்திருந்தான். போர் கடுமையாக நடந்தது. வெற்றிபெறும் ஆற்றல் வாய்ந்த மன்னவனோ, பகை மன்னனை எதிர்பார்த்துக் காத்திருந்தான். வாள் கொண்டு போராட வேண்டிய பகை மன்னன் வாளாவிருந்தான். அதனைக் கண்ட தானைவீரன் ஒருவன் பாடுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

**"பல்சான் றீரே பல்சான் றீரே**

**………………………………..**

**ஒளிறேந்து மருப்பின்நும் களிறும் போற்றுமின்**
**எனை நாள் தங்கும் நும் போரே அனைநாள்**
**எறியார் எறிதல் யாவண தெறிந்தோர்**
**எதிர்சென்று எறிதலும் செல்லான் அதனால்**

**……………………………………………….**

**வேந்துஊர் யானைக்கு அல்லது**
**ஏந்துவன் போலான்தன் இலங்கிலை வேலே"** - (புறநானூறு, பாடல் எண்-301)

தன் தலைவன் பெருமை கூறி, எதிர்ப்படைத் தலைவனை வீரன் ஒருவன் இகழ்கின்றான். நாங்கள் வலிமையைத் துணையாகக்கொண்டு தாக்கியும் எதிர்த்துத் தாக்காதோரை மீண்டும் தாக்குதல் பண்பாடன்று; பீடன்று கற்றறிந்த சான்றோராயிருந்தும் இங்ஙனம் செய்வது போரறமன்று என்பது புரியும்படி பேசினான். எங்கள் தலைவன் வேகமாகச் செல்லும் குதிரையேறி இல்லம் சென்றுள்ளான். ஏனெனில், நெஞ்சுரம்கொண்டு போரிட இணையானவீரன் இல்லாத காரணத்தால் இந்நிகழ்வு ஏற்பட்டது என்றான். வேல் கொண்டு வந்திருந்தால் எம்மன்னனும் வேலுடன் வந்திருப்பான். ஒளிந்துகொள்பவனிடம் சென்று வீரம்காட்டுதல் இழுக்கு. ஆதலால், பகைவர்களே! நாங்கள் பலருடையோம் எனச்சொல்லித் திரியாதீர் என்பதாகப் பாடல் அமைந்துள்ளது.

"போரியலில் தாக்கல் சிறப்பிடம் பெறும். தாக்கலைத் தும்பை எனக் குறித்தல் பொருந்தும். தும்பை-துப்பு - ஐ, தும்பு - ஐ - தும்பை என்றாயிற்று; துப்பு எனில் வலி, அறிவு, உற்சாகம் எனும் பொருளது; தும்பு என்பது குற்றம், வரம்பு எனும் பொருளது" (டாக்டர் தங்கங்கந்தசாமி, போரியல் அன்றும் இன்றும் ப-203). துப்பு என்னும் சொல் வலிமை என்னும் பொருளில் ஆளப்பட்டிருப்பதால் அத்தகைய துப்புடையோனிடம் சென்று போரிடுதலே வீரம் என்பதும், துப்பிலார் மாட்டுப் போரிடாமல் இருப்பது போரறம் என்பதும் புலனாகிறது. உலக வழக்கில் வலிமையில்லாதவனை துப்புக்கெட்டவன் எனக்கூறும் வழக்கம் இதன் வழி தோன்றியிருக்கலாம்.

**பார்புகழும் தானைமறம்**

வஞ்சனையாற் பகைவரை வெற்றி கொள்ளாது அவர் படையோடு எதிரிட்டுப் போரிட்ட நிலையை நல்லமர் என்ற சொல்லால் பதிற்றுப்பத்து குறிப்பிட்டுள்ளது. பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தில் குமட்டூர்க் கண்ணனார் பின்வருமாறு பாடியுள்ளார்.

**"போர்தலை மிகுந்த ஈர்ஐம் பதின்மரொடு**
**துப்புத்துறை போகிய துணிவுஉடை ஆண்மை**
**அக்குரன் அனைய கைவண் மையையே;**
**அமர்கடந்து மலைந்த தும்பைப் பகைவர்**
**போர்பீடு அழித்த செருப்புகல் முன்ப!"** (பதிற்றுப்பத்து, இரண்டாம்பத்து)

வஞ்சனையால் பகைவரை வெல்லாது களங்களில் எதிர்சென்று போரிட்டு வென்ற தன்மையின் காரணமாகத் தும்பை மாலைச் சூடி, நின்னோடும் பகைத்துப் போரிடற்கு மேல் வந்த பகைவர்களது போர்த்திறனையும் பெருமிதத்தையும் அழியச் செய்த போர் விருப்பத்தையே இயல்பாகக் கொண்ட வலிமையாளனே! கூற்றமே வெகுண்டு எதிர்த்துப் போர் செய்யவரினும், அதன் ஆற்றலையும் அழித்து வெற்றி கொள்ளுகின்ற பேராற்றலைக் கொண்டவனே எனக் குறிக்கிறார். வள்ளுவர் குறிப்பிடும் படைக்குரிய இலக்கணம் போன்று இச்செய்தி அமைந்துள்ளது.

இப்பாடலில் 'துப்புத்துறை போகிய துணிவுடையாண்மை' என்னும் தொடர் இடம்பெற்றுள்ளது. இதில்வரும் 'துப்பு' தும்பை என்னும் வலிமையைக் குறிக்கும் சொல் அடையாளமாக இடம்பெற்றுள்ளதை அறியலாம். மேலும் தானை மறவனே தலைமைக்குரியவனாக இருக்க இயலும் என்னும் செய்தியும் இதன்வழி பெறப்பட்டுள்ளது.

**முடிவுரை**

மனித வாழ்க்கையில் போரானது உயிரியல் தேவையாக அமைந்துள்ளது. தன் வீரத்தை உலகிற்கு உணர்த்திப் புகழ் பெறவேண்டும் என்ற உணர்வு கொண்டவர்களாக மறக்குடித்தமிழர்கள் விளங்கியிருந்தனர். தானைமறம் தனித்துவமான சிறப்புடைய தன்னிகரில்லா வீரரின் ஆற்றல்களைப் பறைசாற்றுகிறது. வலிமை கொண்டவனிடம் மட்டுமே போரிடவேண்டும் என்ற மனப்பான்மை சங்கத் தமிழர் வாழ்வில் பின்பற்றப்பட்டதை அறியமுடிகிறது. மேலும், போர்க்களத்தில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன.